Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 22-5-1985 புதன்கிழமை (வைகாசி 9 – றம்ழான் 1) முழக்கம் 106

## நாவற்குழியில் குடியேறியோர் தொடர்ந்து வசிக்க அனுமதி!

சில வாரங்களுக்கு முன்னர் குருநகரிலிருந்து குடியெழுப்பப்பட்டு நாவற்குழி புதிய வீடமைப்புத் திட்டத்தில் குடியேற்றப்பட்ட எண்பத்தாறு குடும்பங்களையும் அங்கேயே தொடர்ந்து வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கும குருநகர் மாடிமனையில் வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டதாயினும், அவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து வீடமைப்பு நிர்மாண அமைச்சின் செயலாளர் அவர்களைத் தொடர்ந்தும் நாவற்குழியிலேயே வசிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார். இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட குருநகர் மாடிமனைகளுக்குப் புதியவர்கள் தெரியப்படுவர்.

# குருநகர் வீடுகள்: இன்றுடன் நேர்முகப் பரீட்சை நிறுத்தப்படுகிறது; நாளை வீடுகள் கையளிப்பு!

குருநகரில் இராணுவ முகாம் இயங்கி வந்த மாடிமனை வீடுகளை அந்தப்பகுதி மக்களுக்கு விநியோகிப்பதற்காக நடத்தப்படும் நேர்முகப்பரீட்சை முன்னர் அறிவிக்கப்பட்டது போல நாளைமுதல் சனிவரை நடத்தப்படமாட்டாது. சகல நேர்முகப் பரீட்சைகளும் இன்றுடன் நிறுத்தப்படும்.

அதற்கு ஏற்றவகையில் இன்றும், நாளைமுதல் சனிக்கிழமைவரைக்கும் நேர்முகப்பரீட்சைக்கு கடிதம் கொடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் அனைவரையும் இன்று காலை எட்டு மணிக்கும் பிற்பகல் நான்கு மணிக்குமிடையில் நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் கொடுக்குமாறு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இன்று வரத் தவறுபவர்களுக்கு பின்னர் நேர்முகப் பரீட்சை நடைபெறாது எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

நூற்று அறுபது வீடுகளும் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு நாளை வியாழக்கிழமை கையளிக்கப்படும்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம் வீடமைப்பு அதிகாரசபை

— 4ம் பக்கம் பார்க்க

# 900 ஈழத் தமிழர்கள் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்

## உயிர் அபாயத்தால் நாடு திரும்ப மறுப்பு; விண்ணப்பங்கள் தனித்தனியாக பரிசிலனை

(லண்டன்)

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தொள்ளாயிரம் இலங்கைத் தமிழர்க்குத் தகுதியின் அடிப்படையிலேயே அடைக்கலம் கொடுக்கப்படும் என்று அந்நாட்டின் உள்துறை அமைச்சர் திரு லியோன் பிரிட்டன்கூறியுள்ளார்.

இலங்கையில் இனக் கலவரத்தால் பாதிக்கப்படக்கூடும் என்ற அச்சம் காரணமாக இலங்கைத் தமிழர் அகதிகளாக அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அவர் சொன்னார்.

தாயகம் திரும்பினால் தங்கள் உயிருக்கு அபாயம் ஏற்படக்கூடும் என்று கூறி பிரிட்டனில் அகதிகளாகத் தங்குவதற்குத் தொள்ளாயிரம் இலங்கைத் தமிழர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையே தோன்றியுள்ள இன கலவரம் அந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்லப் பயப்படும் தமிழர்கள் அனைவருக்கும்

—4 ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவுக்கு செங்கம்பள வரவேற்பு

(மாஸ்கோ)

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்றுப் பிற்பகல் மாஸ்கோ சென்றடைந்த போது அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கிரான் கண்ணி வெடியில்

# ஐந்து கமாண்டோ பொலிஸார் மரணம்

(மட்டுநகர்)

கல்குடாத் தொகுதியின் எல்லைப் பிரதேசமான கிரான் என்ற இடத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நிலக் கண்ணிவெடித் தாக்குதலில் ஐந்து கமாண்டோப் பொலிஸார் ஸ்தலத்திலேயே மரணமானார்கள்.

மேலும் ஏழு பொலிஸார் படுகாயமடைந்ததாகவும், இவர்கள் பயணம் செய்த பொலிஸ் வாகனம் பலத்த

- 4-ஆம் பக்கம் பார்க்க

## திடீர் சம்பவத்தில் ஒருவர் மரணம்; பலர் கைதாகினர்!

குருநகர் டேவிட் வீதிச் சந்திக்கருகாமையில் நேற்று நண்பகல் நடைபெற்ற சமபவத்தின் போது முக்கியமான ஒரு இளைஞர் மரணமானதாகவும், அவரது சடலத்தை நடைபவனியில் வந்தவர்கள் எடுத்துச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஹெய்டனிடம் அமைச்சர் தொண்டா:

# மாநில ஆட்சி ஏற்பட்டால் தமிழர் பிரச்சினை தீரலாம்!

இன்றுள்ள சூழ்நிலையில் தமிழ்ப் பிரதேசங்களை இணைத்த மாநில ஆட்சி ஏற்படுத்தாமல் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று நேற்று தம்மைச் சந்தித்த அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு. ஹெய்டனிடம் அமைச்சர் எஸ். தொண்டமான் வலியுறுத்திச் சொன்னார்.

நேற்று மாலை 5–30 மணி முதல் அரை மணி நேரம் இச்சந்திப்பு அமைச்சரின் அலுவலகத்தில் உதவியாளர்கள் இன்றி நடைபெற்றது.

தமிழர் பிரச்சினைகளை மிக விரிவாக எடுத்துக் கூறிய அமைச்சர் தொண்டமான், இளைஞர்கள் நடத்திவரும் போராட்டம் பற்றியும் விளக்

—4-ஆம் பக்கம் பார்க்க

# உண்ணுவிரதம், ஹர்த்தால் பூரண வெற்றி; எங்கும் மயான அமைதி!

[இ. பாரதி]

சமீப காலமாகஇடம்பெற்று வரும் கொலைச் சம்பவங்கள், தாக்குதல்கள், தீவைப்புகள் ஆகியவற்றைக் கண்டிக்கும் முகமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தால், உண்ணுவிரதம் ஆகியன நேற்று முழுமையாக அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலைகளிலும், கோவில்களிலும், யாழ் பல்கலைக்கழகத்திலும்மேற்கொள்ளப்பட்ட உண்ணுவிரதங்களில் பெருமளவு மாணவர்களும், பொது மக்களும், சிறுவர்களும், கலந்து கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் கச்சேரியில் நேற்றுக்காலை வந்த இளைஞர்கள், ஊழியர்களை வேலை செய்யாமல் கட்டடத்திற்கு வெளியே வந்து நின்று எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு பணித்தார்கள். சுமார் பத்து மணிவரை அவர்கள் கச்சேரி வளவிற்குள் ஒன்றாக நின்று எதிர்ப்பைத் தெரிவித்த பின்னர் கலைந்து சென்றார்கள். இதனால் நேற்று கச்சேரி அலுவல்கள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

—4–ஆம் பக்கம் பரர்க்க

# அரசியல் தீர்வை ஏற்கும் வரை இராணுவ வேலைகள் நிறுத்தப்படாது என்கிறார் லலித்

தீவிரவாதிகள் பிரச்சினைத் தீர்வுக்கு எட்டு அம்சத் திட்டமொன்றைத் தாம் தயாரித்துள்ளதாக நேற்று அறிவித்த அமைச்சர் லலித் அத்துலத் முதலி, தமிழ் இளைஞர்கள் தீவிரவாத இயக்கங்களில் சேர்வதைத் தடுப்பதற்கும் தாம் திட்டமொன்றைத் தயாரித்திருப்பதாகவும், விரைவில் இது வெளியிடப்படும் எனவும் சொன்னார்.

தீவிரவாதிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு அரசியல் தீர்வை ஏற்காதவரை அவர்களது முகாம்களை நாசமாக்குவதையும், அவர்களைப் பலவீனப்படுத்துவதையும் படை வீரர்கள் நிறுத்த மாட்டார்கள்எனவும்தெரிவித்தார்.

நாட்டின் ஒற்றுமை, தேசியக்கீதம், பௌத்த மதத்துக்கு அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள இடம் ஆகியவைகளை சகலரும் ஏற்க வேண்டும் என்றும் நேற்றைய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

தீவிரவாதிகள் இதனை ஏற்கும் வரை ஆயுதப் படையினர் தொகையை அதிகரிப்பதும், அவர்களது பயிற்சியை விஸ்தரிப்பதும் நடைபெறும் எனவும் அவர் சொன்னார்.

பயங்கரவாத முயற்சிகளை முறியடிப்பதில் அரசுக்கு வெற்றியும் தோல்வியும் கிடைத்துள்ளது. இதனைக் கண்டு மக்கள்

—4ஆம் பக்கம் பரர்க்க

# அரச ஊழியர், மாணவர் பாதுகாப்பு பற்றி பிரிகேடியருடன் பேசினர்

யாழ்ப்பாணம் கோட்டையைச் சுற்றியும், அண்மித்துமுள்ள பல்வேறு அலுவலகங்களின் தலைமை அதிகாரிகள் நேற்று வடபகுதி ராணுவஅதிகாரி பிரிகேடியர் எச். வணசிங்காவைசந்தித்து. தங்கள்அலுவலக ஊழியர்களின் பாதுகாப்புப் பற்றிக் கலந்துரையாடினர்.

அலுவலக நேரங்களில் குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூடுகள் கோட்டைக்குள நடைபெறுவதால் தாம் எதிர்நோக்கும் அபாயங்களை இவர்கள் எடுத்துக் கூறினர்.

இயலுமானவரை அவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் பார்த்துக்கொள்வதாக பிரிகேடியர் உறுதியளித்ததாகவும்

— 4ஆம் பக்கம் பார்க்க

## குடாநாட்டு நீர்வழங்கல் வேலைகள் தடைப்படலாம்!

யாழ்ப்பாணம் நீர் விநியோக வடிகாலமைப்புச் சபையில் இடம்பெற்ற கொள்ளை தொடர்பாக அதன் முகாமையாளரும், சக ஊழியர்களும் விடுத்துள்ள வேண்டுகோளின் விபரம் வருமாறு :–

17ம் திகதி வெள்ளிக்கிழமை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான பல உபகரணங்கள் சாதனங்கள் ஒரு சிலரால் அபகரித்துச் செல்லப்பட்டுவிட்டன.

சபையின் இயக்கத்திற்கு அடிப்படைத் தேவைகளான தொலைபேசி, தட்டச்சு இயந்திரங்கள் பராமரிப்பிற்கும் திருத்த வேலைகட்கும் பாவிக்கும் உபகரணங்கள் ஆயுத முனையில் காவலாளிகளைப் பயமுறுத்தி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சிகள் ஒருதொடர் கதையாகி சபையின் செயல்பாடுகளுக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கின்றது என்பதனை வேதனையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இதன் காரணமாக, நிர்மாண வேலைகள் பராமரிப்பு வேலைகளும் குறிப்பாக நீர் விநியோக வேலைகளும் தீவுப் பகுதி உட்பட, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களும் பாதிக்கப்படுவதோடு சபையில் கடமை புரியும் ஊழியர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகி விடும் என அஞ்சுகிறோம்.

நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் இச்சபையின் சேவைகள் மக்களுக்குத் தேவை என்பதனை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து எடுத்துச் செல்லப்பட்ட உபகரணங்களை உடனடியாக சபையில் ஒப்படைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம் என்று கேட்கப்பட்டுள்ளது.

## செல்ல முடியாத நிலையில் இவர்கள்

(அரியாலை)

இம்மாதம் 15-ந் திகதி கொழும்பு ரொறிங்டன் சதுக்கத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்ட பதிவாளர் சேவைக்கான நேர்முகப் பரிட்சைக்கு வடபகுதியைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் போக்குவரத்துச் சீரின்மை காரணமாகச் சமூகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## மகோற்சவம்

(சங்கானை)

கித்தங்கேணி அருள்மிகு ஸ்ரீ மகா கணபதி தேவஸ்தான மகோற்சவம் எதிர்வரும் 23ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

## கிளிநொச்சி கிராமசேவை அலுவலர் சங்கம் உதயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கிராம சேவை அலுவலர்களின் நலன் கருதி கிராம சேவை அலுவலர் சங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் கிளிநொச்சி, உதவி அரசாங்க அதிபர் பணிமனை மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஊரியான் கிராம சேவை அலுவலர் திரு. கே. இராசையா இவ்வைபவத்திற்கு தலைமை வகித்தார். பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் (தலைமைப்பீடம்) திரு. எஸ். அமிர்தலிங்கம் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இம் மாவட்டத்தின் கிராம சேவை அலுவலர்களுக்கு தற்போதைய நிலையில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளையும், அதை நீங்குவதற்கான நடவடிக்கைகள் குறிந்தும் ஆராய்ந்தார். மேலும், பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை, கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலரட்ணம், சமூக சேவைகள் உத்தியோகத்தர் திரு. பொன். நித்தியானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு உரையாற்றினர். கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் வந்து கலந்து கொண்ட கிராம சேவை அலுவலர்களும் தங்களுக்குள்ள பிரச்சினைகள் பற்றி உதவி அரசாங்க அதிபர்களுக்கு எடுத்துரைத்தனர்.

புதிய நிர்வாக சபை தெரிவின் போது புதிய தலைவராக திரு. எஸ். சின்னத்தம்பி தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திரு. பி. குமாரசாமியும், உப தலைவர்களாக திரு. எஸ். தவபாலசிங்கம், கே. தவராஜா ஆகியோரும் தெரிவானார்கள்.

## வீடு சேதம்

(சரசாலை)

கடந்த வாரம் நடந்த அசம்பாவிதத்தினால் மீசாலை விசேட சேவை உத்தியோகத்தர் எஸ். செல்வராசாவின் வீடும் பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

## குருபூஜை

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் நடத்தப்பட்ட திருநாவுக்கரசு நாயனார் குருபூசை கடந்த 18ம் திகதி நடைபெற்றது. சைவப்புலவர் திரு வ. கந்தசாமி இவ் வைபவத்துக்கு தலைமை தாங்கி உரையாற்றினார். சைவப் பெரியார் திரு.மு.தியாகராசா நாவுக்கரசரின் நற்பணி பற்றி அங்கு பேசினார்.

## தொடர்ந்து ஊரடங்கு

அநுராதபுர மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் மாலை ஆறு மணி தொடக்கம் காலை ஐந்து மணிவரை நடைமுறையில் இருந்து வருகிறது.

அநுராதபுரம் தாக்குதல் நடைபெற்ற நாளிலிருந்து தொடர்ச்சியாக இரவு நேர ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு வருகின்றது.




✻ கைதடி கிழக்கு முருகேசு வரதலட்சுமி தம்பதிகளின் மகன் சாந்தரூபன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ அளவெட்டி வடக்கு சம்பரி செல்லம்மா தம்பதிகளின் மகள் அரியமலர் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ காரைநகர் பாலசுப்பிரமணியம் சந்திரா தம்பதிகளின் மகன் கேதீஸ்வரன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ புலோலி மேற்கு முருகேசு சிவநேசன் தம்பதிகளின் மகள் வானதி இன்று தனது பதினோராவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## பதவி உயர்வு

(மண்கும்பான்)

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபையின் வேலணை உப அலுவலகத்தின் நூல் நிலையத்தில் உதவி நூலகராகக் கடமையாற்றி வந்த திரு. நாகலிங்கம் சிவதாசன் என்பவர் இலங்கை உள்ளூராட்சி திணைக்களத்தினரால் நடாத்தப்பட்ட எழுது வினைஞர் பரீட்சையில் சித்தியடைந்து உரும்பராய் உப அலுவலகத்தில் எழுது வினைஞராக பதவியுர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## எச்சரிக்கை ஆலோசனை

(சரசாலை)

தனங்கிழப்புக் கிராமத்தில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்கள் முதலில் இனம் தெரியாத சிலரால் எச்சரிக்கை செய்யப்பட்டனராம். சிறிது நேரத்தின் பின்னர் வேறுசிலர் வந்து கைப்பற்றிய கசிப்பை ஊற்றியதாகவும், வேறு தொழிலைச்செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## சுகாதார நடவடிக்கை

(மருதங்கேணி)

மருதங்கேணிப்பகுதி ஆரம்ப சுகாதார கவனிப்பு சபையினரால் ஆரம்ப சுகாதாரம் பற்றிய கருத்தரங்கு நடாத்தப்பட்டு, கிராமரீதியாக தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டு, தொண்டர்கள் வீடுகள் தோறும் சென்று சுகாதாரம் சம்பந்தமான தகவல்களைத் திரட்டி வருகிறார்கள்.

குழந்தைகளின் தடுப்பூசி ஏற்றுதவர்களின் விவரம், மலசல கூடம் இல்லாதவர்களின் விவரம், போன்றவை சேகரிக்கப்பட்டு, பின் அவை கிராமங்கள் தோறும் பூர்த்தி செய்யப்படும் என்று மருதங்கேணி ஆரம்ப சுகாதார கவனிப்பு சபையின் செயலாளர் திரு. நடராசா தெரிவித்துள்ளார்.

வெற்றிலைக்கேணி, கட்டைகாடு ஆகியபகுதிகளிலும் தொண்டர்களின் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

## புதிய நூலகம்

(மண்கும்பான்)

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் வேலணை உப அலுவலகத்தின் நூல் நிலையப் பொறுப்பாளராக திருமதி ரஞ்சிதமலர் கந்தசாமி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பு மாநகர சபையின் நூல்நிலைய நூலகராக கடந்த 15 வருடங்களாக பதவிவகித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


## வேல் மினி சினிமா

சாவகச்சேரி

மீண்டும் ஆரம்பம்

22.5.85 புதன்கிழமை தொடக்கம் தினமும் பி.ப. 4.00 மணிக்கு சிறந்த திரைப்படங்கள் வீடியோமூலம் காண்பிக்கப்படும்.

22.5.85 — மேஜர் சுந்தரராஜன் நடித்த "பிள்ளையார்"

23.5.85 & 24.5.85 — தியாகராஜன் — ஊர்வசி (இருவேடங்களில்) நடித்த "ராஜா யுவராஜா"



## பெற்றா எசன்ஸ் சப்ளையேர்ஸ்
## PETTAH ESSENCE SUPPLIERS

பேக்கரி தயாரிப்புகள், பிஸ்கட், ரொபி, இனிப்பு, குளிர்பானம், ஐஸ்கிறீம், சிற்றுண்டி வகைகளுக்கான சகலவிதமான எசன்ஸ், கலர்ப்பவுடர், கேக் தயாரிப்புக்குத் தேவையான சகல பொருட்களுக்கும்

- ஊதுபத்தி
- சாம்பிராணி
- விளைவு சூடம்
- ரல்கம் பவுடர்
- வெள்ளை மஞ்சள் வசலின்
- வாசனைத்திரவிய எண்ணெய்
- ஓடிக்கொலோன்

ஆகியவை தயாரிப்பதற்கான உற்பத்திப் பொருட்களும் ஏனைய இதர

- பேப்பர் வகை
- பொக்ஸ்போட்
- காட்போட்
- ஆர்ட்போட்
- நியூஸ்பேப்பர்
- ஓயில் பேப்பர்
- பிறவுண் பேப்பர்
- ரிசு பேப்பர்
- சலப்பின்

மற்றும் எல்லா பொலித்தீன் வகைகளுக்கும் அச்சகங்கட்குத் தேவையான சகல மை வகைகளுக்கும் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பெற்ற ஸ்தாபனத்திற்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

223, Power House Road, Jaffna.


## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் குரோதன வருடம் வைகாசி மாசம் 9ம் நாள் 22–5–85 புதன்கிழமை பகல் 9-4 மணிமுதல் 11-36 வரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்

| | |
|---|---|
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி. |
| ஸ்ரீகாந்தராசா | கலா |
| (உரிமையாளர் மக்மிலன் புத்தகசாலை) | |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருவருள் நலங்கொண்டு திருமண வைபவம் நிகழப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உறவினர்கள், அன்பர்கள் தாங்கள் சுற்றம் சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு.திருமதி.இ.க. குமாரசாமி | திரு.திருமதி. விநாயகமூர்த்தி (பூவிலிங்கம்) |
| "ஸ்ரீகாந்த பவனம்" | "விஜித புரி" |
| பாடசாலை வீதி, | வேலணை மேற்கு, |
| ஆறுகால் மடம் | வேலணை. |
| ஆனைக்கோட்டை. | |

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை
## இராமநாதன் நுண்கலைக் கழகம்

இசைக் கலைமணி/நாட்டிய கலைமணி பயிற்சி நெறியினைப் பயிலுவதற்கான அனுமதி - 1985

மேற்குறித்த கல்வி நெறியினைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் 1985 யூன் 20ம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களும் மேலதிக விபரங்களும் 23x10 செ. மீ. அளவினதான உங்கள் முகவரி கொண்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித மேலுறையை, சிரேட்ட உதவிப் பதிவாளர், தேர்வுகள் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம் 10 05.85

பதிவாளர்.

ஈழமுரசு



உதய சிந்தனை

"பிறருக்கு விலங்கறுப்பதற்காக வீர வம்சம் மீண்டும் மீண்டும் தியாகத்தோப்பில் விளைந்து கொண்டேதான் இருக்கும்"
-இராமகிருஷ்ணர்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதய ஒலி

22-5-1985 புதன்கிழமை (குரோதன வைகாசி 9)

# அச்சத்தை ஊட்டும் காலமும், தொகையும்!

எத்திசை நோக்கி, எங்கு பேசினாலும் "பயங்கரவாதம், பயங்கரவாதம்" என்பதே ஆட்சியாளர் பேச்சும், மூச்சுமாகி விட்டது.

உண்மையில் தமிழ்ப்பகுதிகளில் எவ்வாறான பயங்கரவாதம் நடைபெறுகின்றது என்பதை நேரில் வந்து பார்த்தால் அது தீவிரவாதிகளின் பயங்கரவாதமா, அரச பயங்கரவாதமா என்பது புலனாகும்.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் தமிழ்ப்பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

காரணம், அவர்கள் நேரில் சென்றால் நடப்பவைகளைப் பார்வையிட்டு விடலாமென்ற அச்சம்.

அப்படியிருந்தும், வேறு வழியால் வடக்குக் கிழக்குக்கு கடந்தவாரம் விஜயம் செய்த பி. பி. ஸி, நிருபர் அலன் மக் டொனல்ட், இங்குள்ள முக்கியஸ்தர்களைச் சந்தித்து, பாதிக்கப் பட்ட இடங்களுக்கு விஜயம் செய்து, கண்ணால் கண்டு. காதால் கேட்டுச் சேகரித்த தகவல்கள் அவரையே அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டன.

போர் நடைபெறும் ஒரு நாட்டில் கூட இவ்வாறு நடைபெறுமா என்று அவர் மூக்கில் விரலை வைத்துள்ளார்.

அதன் பின்னர் பி. பி. ஸியில் ஒலிபரப்பான சில செய்திகள், ஓரளவுக்கு இங்கு நடப்பவைகளை உலகம் இனம் கண்டு கொள்ள உதவியிருக்குமென நம்பலாம்.

பத்திரிகையாளர்களைப் போலவே, இங்கு வரும் வெளிநாட்டு அமைச்சர்கள், ராஜதந்திரிகள் கூட தமிழ்ப்பகுதிகளுக்குச் செல்ல அனுமதியில்லை

காரணம் பாதுகாப்பின்மை,

அவர்கள் தமக்குத் தாமே பாதுகாப்புத் தேடிக் கொள்வதாகக் கூறினால் கூட, அதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.

இந்தப் பகுதிகளுக்குச் சென்றால் "திரும்பிவர முடியுமா" என்று பூச்சாண்டியும் காட்டப்படுகின்றது.

இதனால் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடும் வெளிநாட்டவர்கள், இங்கு நடைபெறும் "அழிப்புத் திட்டங்களை" பார்வையிடமுடிவதில்லை.

நாட்டின் மற்றைய பகுதிகளில் வாராவாரம் வீடுகள் கட்டப்படுகின்றன. பத்துலட்சம் வீடுகளை நோக்கி நாடு நடை போடுகின்றது.

ஆனால் தமிழ்ப்பகுதிகளில் தினம்தினம் வீடுகளும், கட்டடங்களும் எரிக்கப்படுகின்றன. குண்டுவைத்துத் தகர்க்கப்படுகின்றன.

இவைகளைத் தப்பித்தவறி யாராவது தட்டிக்கேட்டால், அல்லது நியாயம் கேட்டால் அவன் 'பயங்கரவாதி பட்டியலில்' சேர்க்கப்படுகின்றான்.

இவ்வாறான ஒருபட்டியல் மூலம்தான் "முப்பதாயிரம் தீவிரவாதிகள்" திரட்டப்பட்டிருப்பார்களோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

"கற்பனை உலக பீதிச் சஞ்சாரம்" இரகசிய தகவலாக மாறி, இந்நாட்டிலுள்ள தமிழ்த் தீவிரவாதிகளை முப்பதாயிரமாக அதிகரிக்கச் செய்துள்ளது.

இந்நாட்டின் மாண்புமிகு பிரதம அமைச்சர் கௌரவ ஆர். பிரேமதாசா அவர்கள் பொது நிகழ்ச்சியொன்றில் பேசும்போது, தமிழ்த் தீவிரவாதிகள் தொகை முப்பதாயிரமாக அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவருக்கு இந்தப்புள்ளி விபரம் எவ்வாறு கிடைத்திருக்குமென்பதைப்பற்றி நாம் வியாக்கியானமோ, விமர்சனமோ, ஆராய்ச்சியோ நடத்த விரும்பவில்லை.

ஆனால், இவ்வருட இறுதிக்குள் இவர்கள் மிகப்பெரிய தாக்குதலொன்றை நடத்தத் திட்டமிட்டிருப்பதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக அவர் கூறியிருப்பதுவே எமக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

ஏற்கனவே ஒரு "தை 14"ம் திகதிக்கு அரசாங்கம் அளித்து வந்த முக்கியத்துவம், எத்தனை ரகளையை இங்கு ஏற்படுத்தியது என்பதை நாம் நினைவூட்டத் தேவையில்லை.

இப்போது "டிசம்பர் 31" என்ற மற்றொரு செய்தியை பிரதமர் தெரிவித்துள்ளதால், அதனை பொய் என்று யாரும் நம்பமாட்டார்கள்.

முப்பதாயிரம் தீவிரவாதிகளுக்கு முப்பதாயிரம் இராணுவம் அனுப்பவேண்டும் என்றும் எவராவது கணக்குப் போடலாம்.

அப்படி நடக்குமானால், அதனால் தமிழ்ச் சமூகம் என்னென்ன கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்க வேண்டி நேருமோ என்பதே எம்மை வாட்டும் அச்சமாகும்.

நீடித்து வரும் போரினால் பெரும் நிலைகுலைவு

# லெபனன் அகதிமுகாம் மீது தாக்குதல்: 60 பேர் படுகொலை

(பெய்றூட்)

லெபனன் – பெய்றூட்டில் அகதிகள் முகாம்களைச் சுற்றி நடைபெற்ற மிகப்பெரும் தாக்குதலில் அறுபது பேர் கொலையுண்டதாகவும், இருநூற்று அறுபது பேர் காயமுற்றதாகவும் நேற்று பெய்றூட் அறிக்கைகள் தெரிவித்தன ஷியா சமூகத்தவருக்கும், பாலஸ்தீனியர்க்கும் இடையே மோதல் இடம்பெற்றதாம். மற்றோர் புறத்தே கிறிஸ்தவ, முஸ்லீம் படைகளுக்கிடையே நிகழ்ந்த மோதலிலும் பலர் மடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது சமீப வாரங்களாக லெபனனில் பல தரப்பிலான சண்டைகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதற்கிடையில் லெபனன் அதிபர் ஜமாயலும், சிரிய அதிபர் அஸாத்தும் டமாஸ்கஸில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்த முற்பட்டுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க, லெபனன் கலவர நிலை குறித்து எவ்விதத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பது என்பது குறித்து அமைச்சரவை விரிவாக ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இச்சிக்கல் நிலை தீர்க்கப்பட வேண்டுமாயின் அது பரந்துபட்ட ஓர் அணுகுமுறையுடன் சகல சாரரையும உள்ளடக்கிய சந்திப்பு ஒன்றின் மூலமே சாத்தியமாகலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாநில அதிகாரம் பறிபோவதா?

## பயங்கரவாத தடைச் சட்டம் அ.தி.மு.க. சபையில்எதிர்ப்பு

(புதுடில்லி)

பயங்கரவாதத்துக்கும், சீர்குலைப்புச் சக்திகளுக்கும் எதிரான புதிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் சில அதிகார பூர்வத்திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கு மரண தண்டனையும், சீர்குலைப்பு நடவடிக்கைகளுக்கு ஐந்துமுதல் ஆயுட்காலம் வரை சிறைத் தண்டனையும் இச்சட்டத்தின் மூலம் வழங்க வகை செய்யப் படுகிறது.

அரசிய கட்சிகளுக்கு எதிரானதல்ல இப்புதிய சட்டம் என்று கூறிய உள்துறை அமைச்சர் திரு-எஸ்-பி. சவான் பயங்கரவாதத்தைக் கட்டுப் படுத்த மட்டுமே என்றார்.

இச்சட்டம் சீக்கியருககு மட்டும் எதிரானதல்ல நாடு முழுமைக்கும் உரியது என்றும் அவர் சொன்னார்.

இதற்கிடையில் "இப் புதிய சட்டம் மாநில அரசுகளுக்குள்ள அதிகாரங்களைப் பறிப்பதாக உள்ளது" என்று சபையில் அ.தி.மு.க. பாராளுமன்றக் குழுத்தலைவர் திரு குழந்தைவேலு ஆட்சேபம் தெரிவித்தார்.

"மாநிலங்கள் தமக்குப் போதிய அதிகாரங்கள் இல்லை என குறைப்பட்டு அதன் எதிரொலியாக சர்காரியா கமிஷன் விசாரணையும் நடைபெறும் வேளையில் இவ் புதிய சட்டம் கொண்டு வரப் பட்டுள்ளது" என்று அவர் கூறினார்.

"மாநில அரசு நிர்வாகத்தில் மத்திய அரசு தலையிடுவதான நிலை இது" என்றார் அவர்.

## ஊழலால் கிடைத்தது கல்தா

(மாஸ்கோ)

திறமையின்மை மற்றும் ஊழல் காரணங்களால் சோவியத்யூனியன் ஜோர்ஜியா பிரதேசத்தின் தொழிற்சாலை ஊழியர் பலரும் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று சோவியத்தின் உத்தியோகபூர்வ நாளேடான 'பிராவ்தா' தெரிவித்துள்ளது.

## "இந்திய-ஓமான் நட்புறவு வரலாற்று சிறப்பு பெற்றது"

(லண்டன்)

"பாரதத்துக்கும், ஓமானுக்கும் இடையிலான நட்புறவு வரலாற்றுச் சிறப்பு மிக்கது" என்று ஓமான் செய்தித்துறை அமைச்சர் அங்குராவாஸ் பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்,

"இந்து மாக்கடல் பிராந்தியத்தை அமைதிப் பிராந்தியமாகப் பிரகடனம் செய்வது என்ற நிலைப்பாட்டுக்கு தமது நாடு ஆதரவளிக்கின்றது என்றும் அவர் சொன்னார்.

பந்தோபஸ்து நோக்கம் கருதி அமெரிக்காவுடன் இருதரப்பு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது என்று கூறிய அவர் வளைகுடாப் போர் நிறுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தினார்.

## தடை நீக்கம்

(டாக்கா)

பங்களாதேஷில் எதிர்க்கட்சி சார்பில் வங்கமொழியில் வெளியாகும் நாளேடு ஒன்றிற்கு அரசினால் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

அரசைக் கடுமையாக விமர்சித்ததால் இத்தடை 1984ம் வருடம் ஜூன் மாதம் விதிக்கப்பட்டிருந்தது

## பங்களாதேஷ் தேர்தலில் பலத்த மோதல் நீடித்தது

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெற்ற இரண்டாம் கட்ட உள்ளாட்சித் தேர்தலில் இடம் பெற்ற பலத்த மோதலில் நால்வர் கொல்லப்பட்டனர், நூற்று ஐம்பது பேர் காயமடைந்தனர்.

இரு நூற்றஏழு ஸ்தானங்களுக்கு இத்தேர்தல் இடம் பெற்றது.

முதல் கட்டத் தேர்தலின் போது இடம்பெற்ற மோதலில் அறுவர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய- அமெரிக்க வர்த்தக உறவு

(மாஸ்கோ)

ஆறு வருடங்களுக்குப் பின் அமெரிக்க வர்த்தக அமைச்சர் திரு பேல்ற்றிச் சோவியத்யூனியனுடனான வர்த்தக உறவுகள் உருவாக்குதல் பொருட்டு மாஸ்கோ வந்துள்ளார்.

இருவல்லரசுகளுக்குமிடையே உறவு விருத்தியுற இது உதவுமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இஸ்ரேல், பாலஸ்தீன

## கைதிகள் விடுதலையாவதில் பரஸ்பர நிபந்தனை விதிப்பு

(லண்டன்)

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரால் சிறைப் பிடிக்கப்பட்ட மூன்று இஸ்ரேலிய வீரர்கள் விடுதலை செய்யப்படுவதாயின் ஆயிரத்து ஐநூறு பாலஸ்தீனியர் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை ஏற்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்கம் இச்சமாதான முயற்சியை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சிறப்புப்பரிசு

(பாரிஸ்)

பிரான்ஸில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாவில் யூகோஸ்லேவேகிய இயக்குநருக்கு அதிசிறந்த இயக்குநருக்கான பட்டம் கிடைத்தது. சிறந்த நடிகர் அமெரிக்காவிலிருந்து தெரிவானார்.

## தி. மு. கழக தொண்டர் விடுதலை

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினை எதிரொலியாக மத்திய அரசு அலுவலகங்கள் முன் மறியல் செய்ய முற்பட்ட வேளை கைதாகிக் காவலில் வைக்கப்பட்ட ஏ. ரகுமான் கான் உட்பட நூற்று பத்து தி. மு. க. தொண்டர்களையும் விடுதலை செய்யுமாறு சென்னை பெருநகர் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார்.

## பெரும் தொகை வெடி மருந்து கண்டு பிடிப்பு

(அமிர்தசரஸ்)

பஞ்சாப்பில் வீடொன்றில் சோதனை நடத்திய பந்தோபஸ்து படையினர் நாற்பத்து எட்டுக்கிலோ எடையுள்ள டைனமற்றைக் கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மேலும் இராணுவ, பொலிஸ் சீருடைகளும் அங்கிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஈழமுரசு

## கிழக்கில் அறுபது தமிழர்களை காணவில்லை என அறிவிப்பு!

(புதுடில்லி)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அறுபது தமிழர்கள் காணமல் போய் விட்டார்கள் என்றும் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிப்பதாக அகில இந்திய வானொலி நேற்று தனது செய்தியறிக்கையில் தெரிவித்தது. படையினர் மூன்று கிராமங்களுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதுடன் வீடுகளையும் தீக்கிரையாக்கினர் என்றும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிப்பதாக இச்செய்தியில் மேலும் கூறப்பட்டது.

அமைச்சர் றொனி டிமெல் வேண்டுகோள்

# சமீபகாலத்துச் சம்பவங்களைக் கண்டு மக்கள் மனமுடையக் கூடாது!

(கொழும்பு)

''நாட்டை எதிர்நோக்கியிருக்கும் இன்றைய ஆபத்தான கால கட்டத்தைப் போன்று தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம் என்றுமே உண்டானதில்லை'' என்று நிதி திட்டமிடல் அமைச்சர் றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

''எனவே நாட்டில் சட்டத்தையும். ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக நாம் ஒவ்வொருவரும் அரசாங்கத்திற்குப் பூரண ஒத்துழைப்பை அளிக்கவேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

புலத்சிங்களத் தொகுதியில் பௌத்த விகாரை ஒன்றில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

''சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களைக் கண்டு நாம் மனமுடைந்து விடக்கூடாது'' என்று தெரிவித்த டி மெல் ''சோழர்கள் இலங்கையை ஆக்கிரமித்த காலத்தில் சிங்களவர்கள் யாலப் பிரதேசத்தில் அடைக்கலம் புகவேண்டியிருந்த சந்தர்ப்பத்தை நாம் நினைவில் கொள்ளவேண்டும் என்று சொன்னர் எனினும் விஜயபாகு மன்னன் சோழர்களைத் தோற்கடித்து நாட்டை மீண்டும் ஐக்கியப்படுத்தினன் என்றும் அவர் சொன்னர்.

## அகதிகள் புனர்வாழ்வு வார மாணவர்குழு வேண்டுகோள்

இதுவரை இறந்த மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக யாழ். மாணவர்பிரதிநிதிகள் குழு இம் மாதம் 31 ஆம் திகதி வரையான வாரத்தை அகதிகள் புனர்வாழ்வு வாரமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு மேற்படி குழு விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எங்கள் பிரதேசத்திலேயே எமது மக்கள் அகதிகளாக்கப்பட்டு அல்லலுறுவதை ஆறுதற்படுத்துவதற்காக நாம் எடுக்கும் முயற்சியில் வெற்றி பெறுவதற்கு பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் ஊடாக உடைகள், உணவுப் பொருட்கள் ஆகியவைகளை அனுப்பி வையுங்கள். கண்டிப்பாக பண உதவிகளை தவிர்த்து பொருளுதவிகளையே செய்யுங்கள். அதிபர்களே! ஆசிரியர்களே! மாணவர்களை உற்சாகப்படுத்தி எமது முயற்சிக்கு முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும்வழங்க உங்களாலான உதவிகளையும் புரியுங்கள்.

வட பகுதியிலுள்ள சகல பாடசாலைகளிலும் உதவிப் பொருட்கள் குவியட்டும், 31-ம் திகதிக்குப் பின் யாழ். மாணவர் பிரதிநிதிகள் குழுவாகிய நாம் எமது அத்தாட்சியுடன் பொருட்களை கையேற்பதற்காக எமது பிரதிநிதிகளை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைப்போம்.


### அறிவித்தல்

யாழ்,
பரி. யோவான் கல்லூரி
இன்ரறக்ட் கழகத்தின்
ஆதரவில் சேவை நிதிக்காக
**25-5-85**
சனிக்கிழமை
கல்லூரி மண்டபத்தில்
நடாத்தப்படவிருந்த
'இன்ரறக்ட் கதம்பம்'
நிகழ்ச்சி
தவிர்க்க முடியாத காரணங்களினல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
அதிபர்,
யாழ். பரி. யோவான் கல்லூரி


### திடீர் சம்பவத்தில்...

1-ஆம் பக்கத் தொடர்

மற்றுமொரு இளைஞர்கைதானதாகவும் தெரிகின்றது. இதனைத் தவிர அப்பகுதியில் கைதான பலரில் நான்கு யுவதிகளும் அடங்கியதாகக் கூறப்படுகின்றது.

இப்பகுதியில் அடுத்தடுத்து கேட்ட குண்டு வெடிப்பு, துப்பாக்கி வேட்டுச் சத்தங்களால் இரு மணி நேரமாக இங்கு பெரும் பதற்றம் நிலவியது.


தரமான
தங்க - வைர நகைகளை
எண்ணம் போல்
தெரிவுசெய்ய
யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
**நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்**
(வின்ஸர் தியேட்டருக்கு முன்)
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


## காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் கடத்திய இரும்புப்பெட்டி கல்லுண்டாயில் கிடந்தது!

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலகத்திலிருந்து முக்கிய தஸ்தாவேஜுகள் கோவைகள் வைக்கும் இரும்புப் பெட்டியொன்று நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டது.

எஸ். எம். ஜீ. ரக துப்பாக்கிகளுடன் இரவு சுமார் 10-30 மணியளவில் வந்த சில இளைஞர்களே நிறுவனத்தின் இரண்டு காவலர்களையும் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி வைத்துக்கொண்டு இக்கொள்ளையை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.

கடத்திச் செல்லப்பட்ட இரும்புப் பெட்டி நிறுவனத்தின் மேல்மாடியில் வைக்கப்பட்டிருந்ததாகவும், இதை எடுப்பதற்காக மேல் மாடிக் கதவை இளைஞர்கள் உடைத்துக்கொண்டு உட்சென்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரும்புப் பெட்டி கல்லுண்டாய்வெளியில் கிடப்பதாக நேற்றுக்காலைகிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து காப்புறுதிக் கூட்டுத்தாபன நிர்வாகஸ்தர்கள் அங்குசென்ற போது இரும்புப் பெட்டிக்குள் இருந்த கோவைகளும் சிறுவகளது பாஸ் புத்தகங்களும் மட்டும் இப்பகுதியிலுள்ள குளம் ஒன்றில் கிடக்கக்காணப்பட்டதாம்,

நேற்றுக் காலை கூட்டுத்தாபன ஊழியர்கள் மேல்மாடிக் சென்றபோது அங்கு மேசையில் 'குண்டு' ஒன்று இருப்பதைக் கண்டதாகவும் அதன் பின் எவரும் நிறுவன மேல் மாடிக்குச் செல்லவில்லை என்றும் கூறப்படுகின்றது.

குண்டை செயலிழக்கச்செய்வதற்கு பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடத்தப்பட்ட இரும்புப் பெட்டிக்குள் சுமார் ஆயிரம் ரூபா மட்டுமே இருந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### உண்ணாவிரதம்...

- 1ஆம் பக்கத் தொடர்

யாழ். நகரில் என்றுமே இல்லாத அளவிற்கு கடையடைப்பு நேற்று பெருவெற்றியளித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. யாழ். பஸ் நிலையப் பக்கமாக உள்ள தேனீர்க் கடைகள் கூட முழுநாளும் மூடப்பட்டிருந்தன. யாழ நகரில் மட்டுமல்லாது ஏனைய சகலபகுதிகளிலுள்ள கடைகளும் முழுநாளும் மூடப்பட்டே இருந்தன.

சகல பாடசாலைகளிலும் நேற்று மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். சில பாடசாலை மாணவர்கள் சமீபத்தியச் சம்பவங்களைக் கண்டிக்கும் சுலோகங்களையும் தாங்கியவாறு உண்ணாவிரதம்இருந்தார்கள். அதிபாகள் ஆசிரியர்களும் மாணவர்களின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவளித்தார்கள்.

யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகளும், பொது மக்களும் கலந்து கொண்டார்கள். பல்கலைக் கழக பிரதான கட்டடத்திற்குமுன்பாகவுள்ள மைதானத்தில் கட்டப்பட்டிருந்த கூடாரத்திலேயே இவ் உண்ணாவிரதம் நடைபெற்றது. பக்திப் பாடல்கள் ஒலிபரப்பட்டன. அமைதியான முறையில் உண்ணாவிரதம் இங்கு நடைபெற்றது.

அன்னையர் முன்னணியினரால் மேற் கொள்ளப்பட்ட உண்ணாவிரதம் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலில் நடைபெற்றது. பெருந்தொகையான பெண்கள் இதில் கலந்து கொண்டார்கள். சுலோக அட்டைகளும் இங்கு காணப்பட்டன.

யாழ். மாநகர சபையின் வேலைகளும் நேற்று நடைபெறவில்லை.

சமீபத்திய சம்பவங்களைக் கண்டித்து பல்வேறு அமைப்புக்களால் வெளியிடப்பட்ட துண்டு பிரசுரங்களும் நேற்று வினியோகிக்கப்பட்டன. எந்த வேலையிலும் வைத்திய சேவைகள் பாதிப்புறவில்லை.

### குருநகர் வீடுகள்...

முகாமையாளர் திரு. த. பூ. முருகையா, யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. முருகையா ஆகியோரைக்கொண்ட குழு நேர்முகப் பரீட்சையை நடத்திவருகின்றது.

### அரச ஊழியர்...

-1-ஆம பக்கத் தொடர்

ஊழியர்களும் ஓரளவுக்கு பாதுகாப்பாக நடந்துகொள்ள வேண்டுமென அவர் கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மத்திய கல்லூரி மாணவர்கள் பாடசாலைக்கு வந்துபோகும் நேரமான காலை 7—9 மணிக்கும், பிற்பகல் 1—2-30 மணிக்குமிடையில் படை வீரர்களின் நடமாட்டத்தை அப்பகுதிப் பாதைகளில் தவிர்க்குமாறு மேற்படி கல்லூரி அதிபர் விடுத்த வேண்டுகோளை பிரிகேடியர் ஏற்றுக்கொண்டார்.

### அரசியல் தீர்வை...

-1-ஆம் பக்கத் தொடர்

மனமுடையக் கூடாது என்றும் குறிப்பிட்ட அமைச்சர், திரு. அமிர்தலிங்கத்துக்கு தற்போது அவுஸ்திரேலியாவில் தடல்புடலான உபகாரமளிக்கப்படுவதாகவும் சொன்னர்.

### 900 ஈழத்தமிழர்...

—1-ஆம் பக்கத் தொடர்

அகதி அந்தஸ்து அளிக்கச் சரியான காரணமாகாது என்ருர் திரு. பிரிட்டன்.

தாயகம் திரும்பினல் மிகுந்த தொல்லைகளுக்கு உட்படக்கூடும் எனக் கருதினல்தான் அவர்கள் பிரிட்டனில் தங்க அனுமதிக்கப்டுவார்கள் என்றும் சொன்னர் அவர்.

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரது பிரச்சினையும் ஆராயப்படும் என்றும் உண்மையிலேயே பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு மட்டுமே ஆரம்பத்தில் பன்னிரண்டு மாதங்கள் அடைக்கலம் கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

1984ம் வருடத்தின் ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு தமிழர்கள் எவரும் அவர்கள் விருப்பத்திற்கு மாருகத் திருப்பி அனுப்பப்படவில்லை என்றும் அவர் சொன்னர்.

## சிறைச்சாலை சம்பவம்

கோப்பாய் திறந்தவெளி சிறைச்சாலையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சம்பவத்தில் குண்டு வெடிப்பு இடம்பெற்றதாகவும் பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

### மாநில ஆட்சி...

—1ஆம் பக்கத் தொடர்

இக் கூறியதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

''அரசியல் தீர்வுதான் பிரச்சினைக்கு முடிவு காணும்; ஆனல் ராணுவ நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்'' என்றும் அவர் மேலும் எடுத்துக் கூறியுள்ளார்.

இதுவிடயத்தில் அரசியல்ரீதியிலான ஒரு முடிவை இலங்கை காண்பதற்கு அவுஸ்திரேலியா உதவத் தயாராகவிருப்பதாக அமைச்சர் ஹெய்டன், திரு. தொண்டமானிடம் தெரிவித்துள்ளார்.

### ராஜீவுக்கு செங்...

1-ஆம் பக்கத் தொடர்

ரஷ்ய பிரதமர் டிக்கொனே, வெளிவிவகார அமைச்சர் குறெமிக்கோ ஆகியோர் விமான நிலையம் சென்றிருந்தனர். நேற்றிரவு கிரெம்ளின் மாளிகையில் ராஜீவுக்கு விருந்தளிக்கப்பட்டது. இன்று ரஷ்ய ஜனதிபதி கொர்பசெவுடன் பேச்சுவார்த்தை நடத்துவரர்.

### ஐந்து கமாண்டோ...

1-ஆம் பக்கத் தொடர்

சேதத்துக்குள்ளானதாகவும், தெரியவந்துள்ளது.

வாழைச்சேனையில் இருந்து சென்று கொண்டிருக்கும்போது சுமார் ஏழு மணியளவில் இத்தாக்குதல் நடைபெற்றதாம். தாக்குதல் நடத்தியவர்கள் பண்ணை ஊடாகத் தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேட்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டிவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 22-5-85 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336.